பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு : ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

ஸ்ரீ பியாரிலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

7 ] சென்னை—ஞாயிறு, மே 26, 1946. [ விலை. அணா 2

## உண்மையான பரோபகாரம்

பேருண்மைகள் என்பவை சர்வ வியாபகமானவை. அவை ஜாதி மத பேதங்களுக்குள் அடங்கக்கூடியவை அல்ல.

ஸர் பிலிப் ஸிட்னி என்பவர் போர்க்களத்தில் காயமுற்றுக் கிடந்தபொழுது தாகமாயிருந்தபடியால் நீர் பருகக் கோப்பையைக் கையில் எடுத்ததும் பக்கத்தில் கிடந்த போர்வீரனுக்குத் தம்முடையதைவிட அதிகமான தாகம் என்று கண்டதும் அந்த நீரை அவனுக்கு அளித்துவிட்டுத் தாம் நீர் பருகாமல் இருந்த கதையை மாணவர்கள் எல்லோரும் அறிவார்கள்.

அதே விஷயத்தைப் பற்றி பாகவதத்தில் 9-வது ஸ்கந்தத்தில் காணப்படும் ரந்திதேவனுடைய கதையைக் கவனிக்குமாறு ஒரு நண்பர் அழைக்கின்றார். அவர் எழுதுவதாவது :—

பாகவதமாகிய இதிகாசத்தில் கூறப்பட்டுள்ள ரந்திதேவருடைய கதையானது உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் "ஹரிஜன்" வாசகர்களுக்கு நலம்தரும் என்று எண்ணி அதை எழுதுகின்றேன்.

ரந்திதேவர் தம்மிடம் உள்ளவற்றையெல்லாம் தேவையானவர்களுக்கு வழங்குவதையே வழக்கமாகக் கொண்டிருந்தபடியால் அவரும் அவருடைய குடும்பமும் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

அவர் நீரில்லாமல் நாற்பத்தெட்டு நாட்கள் கழித்தபிறகு ஒருநாள் அவருக்கு நெய்யும் புட்டும் நீரும் கிடைத்தன. அவர் உண்ணப் போகும் சமயத்தில் அவரிடம் பசியாலும் தாகத்தாலும் வருந்திய பிராமணர் ஒருவர் வந்து சேர்ந்தார். ரந்திதேவர் எங்குமுளன் இறைவன் என்ற நம்பிக்கை உடையவராதலால் உடனே அந்தப் பிராமணருக்குக் கொஞ்சம் உணவும் நீரும் கொடுத்தார்.

அதன்பின் மீதியுள்ளதைச் சாப்பிடப்போகும் பொழுது சூத்திரர் ஒருவர் வந்து கையை நீட்டினார். அவருக்கும் கொஞ்சம் கொடுத்தார்.

அதன்பின் மற்றொரு விருந்தாளி நாய்களுடன் வந்து உணவு வேண்டுமென்று கேட்டார். அவர்க்கும் ரந்திதேவர் உணவு கொடுத்தார்.

ஆகவே இறுதியில் அவர்க்கு மீந்ததெல்லாம் நீர் மட்டுமே. அதுவும் அவருடைய தாகம் அடங்கக்கூடிய அளவே. ஆனால் அந்தச் சமயத்தில் சண்டாளர் ஒருவர் தாகம் என்று வந்தார். ரந்திதேவர் எனக்கு முக்தியும் வேண்டாம், மோட்சமும் வேண்டாம், என்ன துன்பம் வந்தாலும் துன்பப்படுவோருடைய துன்பத்தை நீக்குவதே என்னுடைய வாழ்வின் லட்சியம் என்று கூறி அந்தச் சண்டாளர்க்குத் தம்மிடமிருந்த நீர் முழுவதையும் கொடுத்தார்.

சண்டாளர் நீரைக் குடித்துத் தாகத்தைத் தணித்துக்கொண்டதும் ரந்திதேவர் 'நீர் தாகத்தால் சாவாமல் பிழைத்துக் கொண்டதால் என்னுடைய பசியும் தாகமும் அடங்கிப் போய்விட்டன' என்று அந்தச் சண்டாளரிடம் கூறினார்.

டில்லி
11—5—46

பியாரிலால்.

## அதைவிடவும் கேவலம்

சென்றவாரம் நான், பெண்கள் எங்கெல்லாம் நம்முடைய ஹரிஜன சகோதரர்களும் சகோதரிகளும் கஷ்டம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் போய் அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காகத் தங்கள் முழு சக்தியையும் உபயோகிக்குமாறு பெண்களை வேண்டிக்கொண்டேன். அத்துடன் சகோதரிகள் ஒரு கூட்டத்தாரிடம் புது டில்லியிலுள்ள ரீடிங் சாலையிலிருக்கும் ஹரிஜனங்களுடைய வாசஸ்தலத்துக்குப் போய் அங்குள்ளவர்க்கு—அதிலும் முக்கியமாகப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான சேவைகளைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டேன்.

அதன்பின் காந்தியடிகள் "ஆஜ்மீரி வாயில்" அருகிலுள்ள ஹரிஜனச் சேரிக்குச் சென்றபொழுது அவருடன் அங்கே போனவர்களில் நானும் ஒருத்தி. நான் அந்த இடத்துக்குப் பத்து வருஷங்களுக்குமுன் மகாதேவ தேசாயுடன் போயிருக்கிறேன். அவருடைய சாமர்த்தியமான பேனா அந்தச் சேரியின் மோசமான நிலைமையை "ஹரிஜன்" பத்திரிகையில் வெகு உருக்கமாக வர்ணித்துக் காட்டிற்று.

இந்த துர் அதிர்ஷ்டம் பிடித்த மனிதராசிகள் இன்னும் பன்றிகளுடன் சேற்றில் புரண்டுகொண்டும் அவற்றைப் போலவே வாழ்ந்து கொண்டும் இருப்பதைக் காண வருத்தமாகயிருந்தது. அவர்களுடைய நிலைமையை எழுதினால் நம்ப முடியாது, கண்ணால் பார்த்தால்தான் நம்ப முடியும். இந்தச் சேரியைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள கமிட்டியும் முனிசிபல் சுகாதார இலாகாவும் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியாதிருந்தால், அவர்களை அந்த வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டியதாகும். டில்லிவாசிகளும் இந்த மாதிரியான "பிளேக்" ஸ்தலங்கள் விஷயத்தில் ஈவிரக்கமின்றியிருப்பது குறித்து வெட்கப்பட வேண்டியவர்களே. ஜனங்கள் ஒன்றுசேர்ந்து கட்டுப்பாடாக வேலை செய்தால் யாராலும் மறுக்க முடியாத தீமைகளை எதிர்த்து நிச்சயமாக வென்றுவிடலாம் என்பதில் சந்தேகமேயில்லை. இந்த விஷயத்தில் இந்தியர்களும் ஐரோப்பியர்களும், உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தரல்லாதவர்களும் ஒன்றுசேர்ந்து உழைக்கலாம். உண்மையை உரைப்பதானால் இந்த மாதிரியான "பிளேக்" ஸ்தலங்கள் இங்குமட்டும்தான் என்றில்லை, இந்த நாடு முழுவதும் காணப்படவே செய்கின்றன. அவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் குற்றம் அனைவர்க்கும் உரியதே. பெண்கள்

ஹரிஜனச் சேரிகளைச் சீர்திருத்தித் தங்கள் வீடுகளைப் போலவே குடியிருக்கத் தகுந்தவைகளாகச் செய்வார்களானால் அந்தக் குற்றத்தினின்று ஓரளவு விடுதலை பெற்று விடுவார்கள்.

ஸிம்லா அமிர்தகௌர்.
3-5-46

## திரு. தேவப்பிரகாச நய்யாருடைய குறிப்பு

### பொருள் நிலைமை

புது டில்லியில் முக்கியமான தோட்டிகளின் குடியிருப்புக்கள் மூன்றிலும் ஏறக்குறைய 325 வீடுகள் உள. ரீடிங்சாலை குடியிருப்புத் தவிர மற்றவைகளிலெல்லாம், ஹரிஜனங்கள் மற்ற ஜாதியாருக்குப் பக்கத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

சகல குடும்பத்தாரும் முனிசிபல் சபையிடமே வேலை பார்த்து வருகிறார்கள். பெரும்பாலோர் தெருப் பெருக்கும தோட்டிகள். அவர்களுடைய மாதச் சம்பளம் 13 ரூபாய். அவர்களுடைய வேலை, சாலைகளையும் பொதுஜனக் கக்கூசுகளையும் சுத்தம் செய்வதாகும். குப்பை "லாரி"களில் குப்பைகளைக் கொட்டுகிறவர்கள் மாதம் 15 ரூபாய் பெறுகிறார்கள்.

இந்த வேலையில் அமர்த்தப்பட்டுள்ள பெண்கள் மிகச் சிலரே. அதற்குரிய காரணம் விசித்திரமானது. ஆண்கள் விகிதப்படியே பெண்களுக்கும் சம்பளம் கொடுப்பதா யிருந்தாலும் பெண்களுக்குச் சில விசேஷ வசதிகள் செய்து தரவேண்டி யிருப்பதால், பெண்களை நியமித்தால் அதிகச் செலவு ஏற்படுகிறது என்ற காரணத்தால் முனிசிபாலிட்டியார் பெண்களை இனிமேல் நியமிப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதனால் ஆண்கள் 600ம் பெண்கள் 40 மாகவே இருக்கிறார்கள்.

இந்தக் காரணத்தினால் பெண்கள் ஜனங்களுடைய வீடுகளில் போய்த்தான் வேலை தேடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு ஒன்றுக்கு மாதச் சம்பளம் அரை ரூபாய் முதல் ஒரு ரூபாய் வரை கிடைக்கிறது. பங்களாவானால் ஐந்து ரூபாய் வரைக் கிடைக்கும். ஆனால் பங்களாக்காரர்கள் முழுநேரம் வேலை செய்யக்கூடிய தோட்டிகளையே நியமித்து விடுகிறார்கள். ஆதலால் மாதச் சராசரி வருமானம் ஒவ்வொரு பெண்ணுக்கும் 5 ரூபாய் முதல் 12 ரூபாய் வரைதான் கிடைத்து வருகிறது.

சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திலும் கணவனும் மனைவியும் நான்கு குழந்தைகளும் இருக்கிறார்கள். அவர்களுடைய வருமானம் :—

| | |
|---|---|
| கணவன் ரூ. 13 சம்பளம் ரூ. 16 விலை ஏற்ற அலவுன்ஸ் | ரூ. 29 |
| மனைவி ... | 7 |
| குழந்தை ... | 5 |
| ஆக மொத்தம் ரூ. ... | 41 |

அதனால் ஒவ்வொருவருக்கும் சராசரியாகத் தினந்தோறும் கிடைப்பது 4 அணாவே. இதுவும் சராசரிதான். அநேகருக்கு இதைவிடக் குறைவாகவே கிடைக்கிறபடியால் அவர்கள் எப்போதும் பட்டினியையடுத்த நிலையையிலேயே இருந்து வருகிறார்கள்.

எட்டுக் குழந்தைகள் உள்ள ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து முந்தின விகிதப்படி ரூ.19ம் இப்போதைய விகிதப்படி ரூ.35ம் பெறுவதைக் கண்டேன். ஆகவே தனி நபர் ஒவ்வொருவருக்கும் தினசரி சாதாரணக் காலத்தில் 1 அணாவும், இந்தக் காலத்தில் 2 அணாவும் கிடைக்கிறது. இதுவும் எட்டு மணி நேரம் கஷ்டப்பட்டு வேலை செய்வதற்காகும்.

சில குடும்பங்கள் சிறிது நல்ல நிலைமையில் உள. அவர்களுக்கு மாதம் 200 ரூபாய் கூடக் கிடைத்துவிடுகிறது. ஆனால் அவர்கள் விரல் விட்டு எண்ணக்கூட முடியாத அளவு அவ்வளவு சொற்பத் தொகையினரே யாவர். அவர்கள் அவ்வளவு நல்ல நிலைமையி லிருப்பதற்குக் காரணம் அவர்களில் சிலர்க்கு அரசாங்கக் காரியாலயங்களில் சேவகர்களாக வேலை கிடைத்திருப்பதே யாகும்.

### வாழ்க்கை நிலைமை

ரீடிங் சாலைச் சேரியில் சுமார் 800 ஹரிஜனங்கள் 100 வீடுகளிலும் தற்கால உபயோகத்துக்காகக் கட்டப்பட்டுள்ள 25 குடிசைகளிலும் வசித்து வருகிறார்கள். அதனால் அவர்கள் வசித்து வரும் நிலைமை அதிக மோசமாய் இருப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஒவ்வொரு குடும்பத்தார்க்கும் 13 அடி நீளமும் 10 அடி அகலமுள்ள இடமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் போதுமான இடம் இல்லாததால், அநேக குடிசைகளில் ஒரு குடும்பத்துக்குப் பதிலாக இரண்டு மூன்று குடும்பங்கள் வசித்து வருகின்றன. அப்படியும் இடம் போதாமையால் அநேகர் தற்காலிகமாகக் கட்டப்பட்டு வைக்கோல் வேய்ந்த குடிசைகளி லிருக்கிறார்கள். ஆதலால் சராசரியாக ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் ஜனத்தொகை ஏழாகும். கோடை காலத்தில் திறந்த வெளியில் உறங்கலாம். ஆனால் குளிர்காலத்திலோ கணவன் மனைவி மக்கள் மட்டுமின்றிச் சில வேளைகளில் வேறு குடும்பத்தார் கூட ஒன்றாக நெருங்கிப் படுத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். குளிர் அதிகமா யிருப்பதால் கதவையும் மூடிக் கொள்ளுகிறார்கள். காற்றோட்டத்துக்குக் கூரைப் பக்கத்திலுள்ள சின்னக் துவாரம் ஒன்றுதான் உண்டு. வீடுகள் எல்லாம் அழுக்கு மயந்தான். அவற்றை விட அதிக அழுக்கு அவர்களுடைய துணிகள். அவர்களுடைய உடம்புநாற்றம் பொறுக்க முடியாது.

அவர்களுக்குப் போதுமான கக்கூசு வசதியும் ஸ்நான அறை வசதியும் கிடையா. 800 பேர்க்கு 13 கக்கூசுகளும் 4 ஸ்நான அறைகளும்தான் இருக்கின்றன. அதனால் அநேகர் வெளியே அசுத்தம் செய்து ஆபாசமாக்குவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. "நீர்க் கக்கூசு"களை அடிக்கடி பழுது பார்ப்பதுமில்லை. சிமெண்டு போட்டிருந்தாலும் தளங்கள் உடைந்து தகர்ந்தே கிடக்கின்றன. காந்தியடிகள் அங்கே வசிக்கப் போவதற்கு ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அவைகள் பழுது பார்க்கப்பட்டன. அங்கே வைத்திய வசதிக்கு எவ்வித ஏற்பாடும் கிடையாது. அதனால் அழுக்கு வறுமை ஆபாசம் ஆகியவற்றின் காரணமாக உற்பத்தியாகும் நோய்களுக்கு அளவே யில்லை.

### வைத்திய விசாரணை

11ம் தேதி மாலை நாங்கள் தோட்டிகளின் குடியிருப்பில் பூர்வாங்கமாக வைத்தியப் பரிசோதனை செய்தோம். 23 நோயாளிகள் வந்தார்கள். அவர்கள் புண்களாலும் கண், காது நோய்களாலும் வருந்திக் கொண்டிருந்தார்கள்; சிலர்க்கு வாதமும் காசமும், வயிற்றுப் போக்கும் இருந்தன. அதிகச் சிக்கலானவியாதிகள் உடையவர்களைப் பரிபூரணமான பரிசோதனைக்காக லேடி ஹார்டிஞ் வைத்தியசாலைக்கும் இர்வின் வைத்திய சாலைக்கும் அனுப்பி வைத்தோம்.

அந்தச் சேரியிலுள்ள நோயாளிகள் அனைவரையும் பரிசோதிக்கவில்லையாயினும் எங்கள் பரிசோதனையிலிருந்தே அந்தச் சேரியிலுள்ள ஜனங்களின் ஆரோக்கிய நிலைமையை அறிந்து கொள்ளலாம்.

நோயாளிகளைப் பார்க்க வந்திருப்பதாகச் சொன்ன மாத்திரத்திலேயே 30 பேர் வரவேண்டுமானால் அந்கச் சேரியின் ஆரோக்கிய நிலைமை சரியாயில்லை என்பதில் சந்தேகமில்லை. சாதாரணமாக எழுத்தறிவில்லாத ஏழைமக்கள் வைத்தியரிடம் வருவதற்குச் சம்மதப்படுவதே யில்லை. அவர்களுடைய நோய்கள் பெரும்பாலும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வாழ்ந்தால் தாமாகவே மறைந்துபோய்விடும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். அவர்களுக்குத் தேவையாக இருப்பது மருந்துகூடயில்லை, சுகாதாரக் கல்வியும் சுகாதாரமாக வாழ்வதற்கு வேண்டிய வசதியும் தான். அவர்களுடைய தினசரி சராசரி வருமானம் 4 அணாவாக இருக்கும் வரை அவர்கள் "சோப்" முதலியவற்றை உபயோகிக்க முடியாது என்று சொல்லத் தேவையில்லை.

### அவர்களுடைய குறைகள்

அவர்களுடைய குறைகளும் கோரிக்கைகளும் வருமாறு :—

(1) சமூகக் குறைகள் :—"பஸ்"களிலும் "ரயில்"களிலும் பொதுஜனங்கள் அவர்களை நடத்தும் விதமும் சர்க்கார் காரியாலயங்களில் அவர்களுடன் வேலை பார்ப்பவர்கள் அவர்களை நடத்தும் விதமும்.

(2) பொருளாதாரக் குறைகள் ,—ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அவர்களை லாரி ஓட்டுபவர்களாகவும் சேவகர்களாகவும் நியமிப்பதை எதிர்க்கிறார்கள். நியமிப்பவர் தைரியமில்லாதவராயிருந்தால் நியாயம் கிடைப்பதில்லை. இந்த உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் நியமிக்கப்பட்ட வரிசைக் கிரமமாக "தரோகா" பதவி கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது தோட்டி வகுப்பினரே 'தரோகா" பதவிக்குத் தகுந்தவர்களாக முன்வரிசையில் இருப்பதால் இதுமுதல் கீழுள்ளவர்களை மேலே உயர்த்துவதில்லை என்று கூறி வெளியேயிருந்து தோட்டி வகுப்பினரல்லாதவரை அந்தத் "தரோகா" உயர்பதவிக்கு நியமிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

(3) குடியிருப்புக் குறை :—வீடுகள் கட்டுவதற்காக வால்மீகி கோயிலைச் சுற்றியுள்ள இடத்தை இனாமாகவோ அல்லது குத்தகையாகவோ கொடுக்கவேண்டும் என்றும் அது முடியாவிட்டால் விலையாகவேனும் கொடுக்கவேண்டும் என்றும் கேட்கிறார்கள். வீடுகள் கட்டுவது சம்பந்தமாக முனிசிபல் சபையார் விதிக்கும் விதிகளின்படியே நடந்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை முற்றிலும் நியாயமானதாகும். அதை வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.

### சமூக சேவை

இதுவரை எவ்விதமான சமூக சேவையும் அவர்களிடையே செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. அநேக ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் சேவை செய்ய வந்த போதிலும் சிறிது காலத்துக்குப் பின் போய் விட்டார்கள். அதனால் ஹரிஜனங்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஆயினும் அவர்கள் உண்மையாகச் சேவை செய்ய விரும்புகிறவர்களை வரவேற்க வேண்டுமென்றே எண்ணுகிறேன். அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதானால், அவர்களுடைய வாழ்வுடன் தொடர்புள்ளதாகவும் அவர்களுடைய வறுமை நிலைமையைப் போக்க உதவக் கூடியதாகவும் இருக்கும் கல்விதான் அவர்களுக்குப் பிடித்தமானதாக இருக்க முடியும்.

அவர்கள் தங்கள் வறுமை நிலைமையை நீக்கிக் கொள்வதிலேயே அதிகக் கவனமுடையவர்களாக இருந்தபோதிலும், தங்களுக்குச் சமூக சம்பந்தமாக ஏற்பட்டுள்ள குறைகளைப் பற்றியே அதிகமான மனவேதனையுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையில் சிறிதளவு சீர்திருத்தம் ஏற்பட்டதுமே அந்த அளவுக்கு அவர்களுக்குத் தங்கள் நிலைமைக் குறித்து அதிகமான மனவேதனை உண்டாய் விடுகின்றது.

அவர்களில் பெரும்பாலோர் எழுத்தறிவில்லாதவர்கள். முன்னால் வால்மீகிக் கோயிலில் ஒரு பகற் பாடசாலையும், ஒரு இராப் பாடசாலையும் நடந்து வந்தன. ஆனால் ஹரிஜனக் குழந்தைகளைச் சகல பாடசாலைகளிலும் சேர்த்துக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டபடியால் அந்தப் பாடசாலைகள் இப்போது நடக்க வில்லை'

## ஞாபகப்படுத்துவது நல்லதே

பேர் சொல்லாமல் ஒரு நண்பர் கிறிஸ்தவ வேத நூலில் ஜாப் என்னும் பெரியார் எழுதிய பகுதியிலிருந்தும், டேவிட் இயற்றிய தேவாரங்களிலிருந்தும் சில பொருத்தமான பகுதிகளை எழுதி அனுப்பியிருக்கின்றார். அவை நமக்குத் தர்மத்தைச் சதாகாலமும் ஞாபகமூட்டுவதாக இருப்பதால் அவைகளை நான் சந்தோஷமாகக் கீழே தருகின்றேன். அந்தத் தொகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடியது யாதெனில் "மனிதன்வெறும் தூசிமாத்திரமே,எவ்வளவு உயர்வாகச்சொன்னாலும் புல்லுக்கு அதிகமாகச் சொல்ல முடியாது, அதனால் அவன் இந்த பூமியில் வாழும் சொற்ப காலத்தை மனித ஜாதிக்குச் சேவை செய்வதினால் கழிப்பதே நல்லது" என்பதே. மனிதன் என்ன காரியம் செய்தாலும் பிரயோஜனப் படப் போவதில்லை என்று சிலர் கூறுவர். அது பிறரைச் சார்ந்து வாழும் சோம்பேரியின் வேதாந்தமே யன்றி வேறன்று. இந்த நண்பர் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கமாட்டார் என்று எண்ணுகின்றேன்.

ஜாப் :—

பெண் வயிற்றில் பிறக்கும் மனிதனுக்கு
    ஆயுள் சொற்பம், துன்பமே அதிகம்.
மலர் போல் தோன்றி உதிர்கின்றான்,
    நிழல்போல் தோன்றி மறைகின்றான்.
அவனுடை வாழ்நாள் எல்லாம்
    உன்வசமே, அந்த எல்லையை
    அவனால் மீற முடியாது.
மரத்தை வெட்டினால் தளிர்க்கும் ;
    மறுபடியும் கிளைவிட்டு வளரும்.
வேர்கள் முதிர்ந்தாலும் நீரைப் பருகும்;
    இளஞ் செடிபோல் இலைகள் உண்டாகும்.
ஆனால் மனிதனோ மாண்டு மடிந்து
    மண்ணோடு மண்ணாய்ப் போகின்றான்.
கடல்நீர் வற்றி வரண்டு போவது போல்
    இறந்தவன் எழுந்திருப்பதில்லை.

தேவாரம் :—

இறைவனே! என்னுடைய ஆயுள் எவ்வளவு என்பதையும் நான் எத்துணைப் பலவீனன் என்பதையும் எனக்குக் காட்டியருளும்.

என்னுடைய ஆயுளை உள்ளங்கை அளவாகச் செய்திருக்கிறீர். உம்முடைய சன்னிதானத்தில் அது அற்பத்திலும் அற்பமே. ஆம், எத்துணைப் பெருமையும் தற்பெருமையே யன்றி வேறன்று.

இறைவன் நம்மை அறிவான், நாம் வெறும் தூசிதான் என்பதை மறப்பதில்லை.

மனிதனுடைய வாழ்க்கை வெறும் புல்லே, பூ செழித்து வளர்ந்தாலும் காற்று அடித்ததும் காணாமற் போகும்.

ஸிம்லா, மோ. க. காந்தி
13—5—46

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு: ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

மே 26 ஞாயிறு 1946


## ஒரு ஆராய்ச்சி

பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக மந்திரி தூது கோஷ்டியாரும் வைஸிராயும் வெளியிட்டுள்ள அறிக்கையை நான்கு நாட்களாக துருவித் துருவி ஆராய்ந்த பின்னும் இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் இதைவிட அதிகச் சிறப்பான அறிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டிருக்க முடியாது என்ற என்னுடைய எண்ணம் உறுதிப்படவே செய்கின்றது. அதை அறிந்து கொள்ளாவிட்டால் அது நம்முடைய பலவீனத்தையே காட்டும். காங்கிரஸ் மகாசபையும் முஸ்லிம் லீகும் ஒத்துப்போகவுமில்லை, போகவும் முடியாது. நம்மிடையேயுள்ள வித்தியாசங்கள் எல்லாம் பிரிட்டிஷாருடைய சிருஷ்டிகளே என்று நாம் இந்தச் சமயம் முட்டாள் தனமாக எண்ணி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதானால் நாம் பெரும் பிழை செய்பவர்களாவோம். தூது கோஷ்டியார் இங்கிலாந்திலிருந்து இவ்வளவு தூரம் வந்திருப்பது இந்த வித்தியாசங்களைத் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்காக வன்று. அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை அதி சீக்கிரத்தில் எளிதான முறையில் நீக்கி விடுவதற்கான மார்க்கத்தைக் கண்டு பிடிப்பதற்காகவே வந்திருக்கிறார்கள். அப்படியில்லை என்று நிரூபிக்கப்படும்வரை அவர்களுடைய பேச்சில் நம்பிக்கை வைக்கக்கூடிய அளவு நாம் தைரிய முடையவர்களாக இருக்கவேண்டும். வீரமானது ஏமாற்றுகிறவன் ஏமாற்றும் அளவே செழித்து வளர்வதாக இருக்கின்றது.

ஆயினும் நான் அவர்களைப் பாராட்டுவதைக் கொண்டு, பிரிட்டிஷாருக்கு நலமாயிருப்பதெல்லாம் இந்தியர்க்கும் நலமாகவே யிருக்கும் என்று கூறுவதாக எண்ணிவிட வேண்டாம். அவர்களுக்கு அதிக நன்மை தருவது நமக்கு அதிகத் தீமை தருவதாகக் கூட இருக்கலாம். நான் கூறுவதன் பொருள் அடியிற் காண்பவற்றி லிருந்து தெளிவாகும் என்று எண்ணுகின்றேன்.

அறிக்கையை வெளியிட்டுள்ளவர்கள் தங்கள் கருத்தை யெல்லாம் பரிபூரணமாகக் கூற முயன்றிருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவுக்குச் சுதந்திர சாஸனம் தயாரிக்கும் விஷயத்தில் இரண்டு கட்சியாரையும் ஒன்று சேர்ந்து வேலை செய்வதற்கு எது குறைந்த பட்ச தேவையோ அதைத் தாங்கள் பலருடன் பேசி வந்ததிலிருந்து அறிந்து கொண்டார்கள். அவர்களுடைய ஒரே லட்சியம் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக பிரிட்டிஷ் ஆட்சியை முடித்து விடுவதே யாகும். தங்கள் முயற்சியால் கூடுமானால், உள்நாட்டு யுத்தம் என்று சொல்லக் கூடிய அளவில் சச்சரவுகள் நேராதபடி இந்தியாவை ஏக ஐக்கிய தேசமாக இருக்கும்படி செய்துவிட்டுப் போகவே விரும்புகிறார்கள். எப்படியானாலும் போய்விடவே விரும்புகிறார்கள்.

தூதுகோஷ்டியார் இரண்டு கட்சியாரையும் கலந்து பேசுவதற்காக ஸிம்லாவில் கூட்டி வைத்தார்கள். அது அவர்களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்றோ அதை அவர்கள்தான் சொல்ல முடியும். ஆனால் இரண்டு கட்சியாரும் எவ்விதமாகவும் ஒத்துவர முடிய வில்லை. ஆயினும் தூதுகோஷ்டியார் சிறிதும் சோர்வடையாமல், டில்லிக்கு வந்து பிரிட்டிஷாருடைய கண்காணிப்போ, செல்வாக்கோ எதுவுமில்லாத இந்தியச் சுதந்திரச் சாஸனத்தைத் தயாரிக்கக் கூடிய அரசியல் நிர்ணய சபையை நிறுவுவதற்கான நோக்கத்துடன் கூடிய ஒரு சிறந்த அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். அந்த அறிக்கை வேண்டுகோள் விடுப்பதாகவும், புத்திமதி கூறுவதாகவும் இருக்கிறது. அதில் கட்டாயம் எதுவுமில்லை. மாகாணச் சட்ட சபைகள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதும், தேர்ந்தெடாதிருப்பதும் அவர்களுடைய இஷ்டத்தையே பொறுத்தது. தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணய சபைக்குப் போகவும் செய்யலாம், போகாமலும் இருக்கலாம். அரசியல் நிர்ணய சபை கூடி அறிக்கை கூறுவதற்கு மாறான முறையில் காரியங்களை நடத்த தீர்மானிக்கவும் செய்யலாம். நம்மைக் கட்டுப்படுத்துவதெல்லாம் நம்முடைய தற்கால நிலைமை ஒன்றேயாகும். தனியாக வோட் செய்வதானது இரண்டு முக்கியமான கட்சியார்களையும் கட்டுப்படுத்துவதும் அரசியல் நிர்ணய சபை குலைந்து போகாமல் இருப்பதற்காகவன்றி வேறெந்தக் காரணத்துக்காகவுமன்று. இதை எழுதும்போது நான் மறுபடியும் அறிக்கையை எடுத்து கவனமாகப் படித்தேன். நம்மைச் சட்டப்படி கட்டாயப்படுத்தக் கூடியது ஒன்றுமே யில்லை என்ற முடிவுக்கே வந்தேன். நம்மைக் கட்டாயப் படுத்தக் கூடிய சக்திகள் நம்முடைய கௌரவம், அவசியம் ஆகிய இரண்டு மட்டுந்தான்.

அறிக்கையில் கட்டாயப் படுத்தும் பாகமானது பிரிட்டிஷ் சர்க்கார் செய்துதீர வேண்டியது இது வென்று கூறுவதே யாகும். அதனால்தான் பிரிட்டிஷ் தூதுகோஷ்டி மெம்பர்கள் நால்வரும் தங்கள் அறிக்கையை வெளியிடுமுன் பிரிட்டிஷ் மந்திரி சபை பிரிட்டிஷ் பார்லிமெண்டு இரண்டின் பரிபூரணமான அனுமதியையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணுகின்றேன். அவர்களுடைய அறிக்கை பிரிட்டிஷ் ஆட்சியைத் துறந்துவிடுவதற்கான பிரதம அறிகுறியாக இருப்பதால் அவர்கள் நம்முடைய மனமார்ந்த பாராட்டுதலுக்கு உரியவர்கள் ஆவார்கள். ஆட்சி பரிபூரணமாக நீங்கி விடுவதற்கு இன்னும் பல செய்யவேண்டி யிருப்பதால்தான் நான் இதை "வாக்குறுதிப் பத்திரம் என்று கூறுகிறேன்.

இந்தியா தானாகவே யாதொரு நிர்ப்பந்தமுமின்றி அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தபோதிலும், இந்தியாவிலுள்ள கட்சிகள் நிர்ப்பந்தத்தின்மேல் செய்வதை விடக் கூட அதிகமாகத் தானாகவே மனமொப்பிச் செய்யக்கூடிய அளவு நல்ல கட்டுப்பாடும் பொறுப் புணர்ச்சியுமுள்ள ஸ்தாபனங்களாக இருப்பதாகத் தூது கோஷ்டியார் எண்ணி யிருப்பது சரியே. அதனாலேயே பெத்விக் லாரன்ஸ் பிரபு

"அந்த அடிப்படையில் அவர்கள் ஒன்று கூடுவார்களானால், அவர்கள் அந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டதாகவே அர்த்தமாகும். ஆயினும் ஒவ்வொரு கட்சியிலுமுள்ள பெரும்பாலான மெம்பர்கள் விரும்பினால் அவர்கள் அந்த அடிப்படையை மாற்றவும் செய்யலாம்."

என்று ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினார். அறிக்கையின் விபரங்களை நன்றாக அறிந்தபின் பிரதிநிதிகளானவர்கள் அடிப்படையை முக்கியமான கட்சிகள் மாற்றுவதற்கு அனுஷ்டிக்க வேண்டிய முறைப்படி நடந்து மாற்றினாலொழிய மாற்றாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுவதே அவருடைய கருத்தா யிருக்குமானால் அது முற்றிலும் சரியே. ஒன்றை யொன்று எதிர்க்கும் இரண்டு மூன்று கட்சியார் கூடுவதானால் ஏதோ ஒரு அடிப்படையை ஒத்துக்கொண்டுதான் கூடு முடியும்,

இந்தக் கட்சிகளுக்கு மத்தியஸ்தராக யாருமில்லாததால் அறிக்கையை வெளியிட்டவர்களே தங்களை மத்தியஸ்தர்களாக நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஏதேனும் ஒரு குறைந்த பட்ச அடிப்படையை வகுத்துக் கொடுத்தால்தான் கட்சியார்கள் ஒன்று கூடுவார்கள் என்று எண்ணியே இந்த யோசனையைக் கூறுவதோடு அதைக் கட்சியார்கள் தங்கள் கூட்டுச் சம்மதத்தின் பேரில் ஏற்கவோ, குறைக்கவோ, மாற்றவோ செய்யலாம் என்றும் கூறி யிருக்கிறார்கள்.

அறிக்கையில் இதுவரை யுள்ள பாகம் முற்றிலும் ஏற்கக்கூடியதாகவே இருக்கின்றது. ஆனால் மாகாணங்கள் விஷயத்தில் அவர்கள் கூறும் யோசனை யாது? சீக்கியர்களுக்குப் பஞ்சாப் ஒன்றுதான் அவர்களுடைய தாய்நாடு. அப்படி யிருக்க அவர்கள் தங்கள் விருப்பத்திற்கு மாறாக புதிதாக உண்டாக்க எண்ணும் "பி" ராஜ்யத்தைத் தங்கள் தாய்நாடாக எண்ணுவதெப்படி? அதேபோல் விருப்பத்துக்கு மாறாக எல்லைப்புற மாகாணம் "பி" ராஜ்யத்திலும் அஸ்ஸாம் மாகாணம் "ஸி" ராஜ்யத்திலும் சேர்ந்துகொள்ள வேண்டுமோ? அஸ்ஸாம் மாகாணம் பெரும்பாலும் முஸ்லிமல்லாத மாகாணமாயிற்றே. அறிக்கையானது நிர்ப்பந்தம் எதுவும் செய்வதில்லை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்து நிற்பதா சேர்ந்து கொள்வதா என்ற விஷயத்தில் பரிபூரணமான சுதந்திரம் அளிக்க வேண்டியதே நியாயம் என்று எண்ணுகிறேன். ஏ, பி, ஸி என்ற தொகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு அதில் சேரவோ சேராமலிருக்கவோ சுதந்திரம் உண்டு. சேர்ந்த பின் பிரிந்து போவதற்கும் உரிமை உண்டு. அது ஒரு அதிகப்படியான பாதுகாப்பு ஆகும். ஆயினும் அறிக்கையில் 15 (5) பாராவில் காணப்படும் சுதந்திரமே பிரதானமானது:—

"மாகாணங்கள் சட்ட சபை மந்திரி சபையுடன் கூடிய தொகுதியாகச் சேர்ந்து கொள்ள உரிமையுடையதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு தொகுதியும் பொதுவாக நிர்வகிக்க வேண்டிய விஷயங்கள் இவை என்று நிர்ணயித்துக் கொள்ளலாம்."

19-வது பாராவில் கட்டளையாக வின்றி யோசனையாகக் கூறி யிருப்பதானது இந்தச் சுதந்திரத்தைப் பறித்து விடவில்லை என்பது தெளிவு. அரசியல் நிர்ணய சபையின் முதற்கூட்டத்தில் அதன் தலைவர், மாகாணப் பிரதிநிதிகள், தொகுதிசேரும் தத்துவத்தை ஒத்துக் கொள்கிறார்களா, ஏற்றுக் கொண்டால் தங்கள் மாகாணம் சேர வேண்டியதாகக் கூறப்பட்டிருக்கும் தொகுதியை ஒத்துக்கொள்ளுகிறார்களா என்று கேட்பார். இவ்விதமாக ஒவ்வொரு மாகாணத்துக்கும் இயற்கையாகவேயுள்ள சுதந்திரமும் 15 (5) பாரா தரும் சுதந்திரமும் பாதுகாக்கப் படுகின்றன. இந்த விதமாகப் பொருள் கொண்டால் தான் இரண்டு பாராக்களுக்கு மிடையிலுள்ள முரண்பாடும் நிர்ப்பந்தம் செய்வதாக அறிக்கைமீது கூறக் கூடிய குறையும் நிவர்த்தியாகும். ஆதலால் தொகுதி யோசனையாலும் தொகுதியில் மாகாணங்களை அவற்றின் விருப்பத்தைக் கேளாமல் சேர்த்திருக்கும் முறையாலும் கலக்கமடைந் திருப்பவர்கள் என்னுடைய வியாக்கியானத்தை ஏற்றுக்கொண்டால் கலக்கத்துக்கு சிறிதளவு கூட காரணமிராது என்பதை அறிந்து கொள்வார்கள்.

அவசரமாகப் படிப்பவர்களைத் திகைக்க வைக்கக்கூடிய விஷயங்கள் பல அறிக்கையில் காணப்படுகின்றன. ஆனால் அறிக்கையானது அதி சீக்கிரத்தில் இந்தியா சுதந்தரம் பெறுவதற்கான வழியைக் காட்டி அதை ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வேண்டிக் கொள்வதாகவும் நமக்குப் புத்திமதி கூறுவதாகவுமே இருப்பதை மறந்து விட்டால்தான் இந்தத் திகைப்பு உண்டாகும். அதி சீக்கிரத்தில் இந்தியா சுதந்திரம் அடைய வேண்டியதன் காரணத்தை இன்றும் விளக்கிக்கொண் டிருக்கவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது உண்டாயிருக்கும் குழப்பத்திலிருந்து புதியதோர் உலகம் உற்பத்தியாக இருக்கும் தற்கால நிலைமையில் அடிமையா யிருக்கும் இந்தியா பிரிட்டிஷ் கிரீடத்தில் முன்போல் "தலை சிறந்த ரத்னமாக" இருக்க முடியாது. குப்பைத் தொட்டியில் எறியவேண்டிய அளவு கறுப்பு நிறமான களங்கமாகவே யிருக்கும். பிரிட்டிஷ் கிரீடம் பிரிட்டனுக்கும் உலகத்துக்கும் வேறுவிதமாக இதைவிட அதிகமான நன்மையைச் செய்யமுடியும் என்று நம்பவும் பிரார்த்திக்கவும் செய்வோமாக. "தலை சிறந்த ரத்னம்" என்று கூறுவது வெறும் ஆணவமே யாகும். "வாக்குறுதிப் பத்திரத்"தின்படி அணுவளவும் பிசகாமல் நடந்து கொண்டால், பிரிட்டிஷ் கிரீடமானது கடமையைச் சரிவர நிறைவேற்றுவதன் மூலம் உரிமையாகக் கிடைக்கக்கூடிய தனிச் சிறப்புடைய ரத்னத்தைப் பெற்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

வாக்குறுதிப் பத்திரத்தை நிறைவேற்றுவற்காகச் செய்யப்படவேண்டிய விஷயங்கள் பல வுள. அவற்றைக் குறித்து அடுத்த ஹரிஜன் இதழில் எழுதுவேன்.

புதுடில்லி                மோ. க. காந்தி
20—5—46.

## பஞ்சம் சம்மந்தமான குறிப்புக்கள்

### (1) தான்யங்களை வீணாக்குதல்

நமக்கு உணவுப் பொருள்கள் அமெரிக்காவிலிருந்து வரும் என்ற நம்பிக்கை இப்போது இல்லாது போய்விட்டபடியாலும், ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் உணவுப் பங்கீட்டு முறை சரியாக நடக்காமல் நின்று போகும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறபடியாலும், பட்டினியால் சாகப் போகும் மக்களைக் காப்பாற்றுவதற்கு உபயோகிப்பதற்குப் பதிலாக ஒரு தான்ய மணியைக் கூட வீணாக்கவோ வேறு விதமாக உபயோகிக்கவோ கூடாதென்று அதிகக் கண்டிப்பான உத்திரவுகளை உடனே பிறப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

கைத் தொழில்களில் உபயோகிப்பதற்கான "டெக்ஸ்ட்ரைன்"—"ஸ்டார்ச்" என்னும் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக ஏராளமான உணவுப் பொருள்களை உபயோகிப்பதை இந்தப் பத்திரிகையில் சில நாட்களுக்குமுன் காட்டியிருந்தோம். இப்போது ஒரு நண்பர் லட்சத்து அறுபத்தொன்றாயிரம் டன் தான்யங்கள் இந்த விதமாக உபயோகமாவதுடன் ஏராளமான தான்யங்கள் வீணாவதையும் குறித்து விபரவாக ஒரு அறிக்கை தயாரித்து அனுப்பி யிருக்கின்றார். இந்தத் தவறான காரியத்தை முற்றிலும் நிறுத்த முடியா விட்டாலும் அதிகமான அளவு குறைத்து விட முடியும் என்பதில் சந்தேகமில்லை.

நண்பர் எழுதுகிறார்:—

நான் விசாரித்ததில் இப்போது ஸ்டார்ச், டெக்ஸ்ட்ரைன், மாவு போன்ற வஸ்துக்களை அதிகமான அளவில் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பிரிட்டிஷ் இந்தியாவிலும் சமஸ்தானங்களிலுமாக 13 இருப்பதாகத் தெரிகிறது. ஸ்டார்ச், டெக்ஸ்ட்ரைன் போன்றவைகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் மக்காச் சோளம், கோதுமை, அரிசி, மரச் சீனிக் கிழங்கு, உருளைக் கிழங்கு, பார்லி முதலியனவாகும்.

இந்த ஸ்டார்ச்களும், டெக்ஸ்ட்ரைன்களும் பல விதமான கைத் தொழில்களுக்கு உபயோகமாகின்

றன. ஆயினும் நான் மிகப் பெரிய அளவில் செலவாகும் மூன்று முக்கியமான கைத் தொழில்களை மட்டுமே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் :—

(1) **துணிக்குப் "பசை"யாக :** நூலுக்கும் துணிக்கும் பலமுண்டாக்குவதற்காகப் பசை போடுவது சர்வ சாதாரணமான வழக்கமாக இருந்து வருகிறது. இந்தியாவிலுள்ள நெசவு ஆலைகளும், கைத் தறிகளும் வருஷந்தோறும் உபயோகிக்கும் "பசை"ப் பொருள்களின் மொத்த அளவு சுமார் 1,32,000 டன்கள் ஆகும். உபயோகமாகும் "பசை"ப் பொருளின் அளவு, நூலின் நம்பரையும், நெய்யும் துணியின் தரத்தையும், அது விற்கப்படும் விலையையும், இவற்றை யெல்லாம் விட முக்கியமாக உற்பத்தி செய்வோரின் இஷ்டத்தையும் பொறுத்ததாகும். மலிவான தரங்களை அதிகமான விலைக்கு விற்பதற்காக அவற்றிற்கு பசையை அதிகமாக உபயோகிக்கிறார்கள். அத்தகைய மலிவான துணிகளை வாங்கும் ஏழைகள் தான் அப்படி அதிகப்படுத்தும் விலையைக் கொடுக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். 1,32,000 டன் பசைப் பொருள் உண்டாக்க, 70,200 டன் ஸ்டார்ச் அல்லது டெக்ஸ்ட்ரைன் தேவை. இந்த அளவு ஸ்டார்ச் செய்ய இரட்டிப்பு அளவு உணவுப் பொருள்கள் தேவை. அதாவது வருஷந்தோறும் பசைப் பொருட்கள் உண்டாக்குவதற்காக 1,40,400 டன் தான்யங்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. இந்தியாவில் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதான மேற்கூறிய தான்யங்களி லிருந்தே ஸ்டார்ச்கள் செய்யப்படுகின்றன. அந்தத் தான்யங்களில் 30 சதமானம் முதல், 60 சதமானம் வரை "ஸ்டார்ச்" காணப்படுகிறது. சராசரியாக 50 சதமானம் என்று வைத்தே நான் கணக்கிட்டிருக்கிறேன்.

(2) **கோந்து உண்டாக்க :** புள்ளி விபரங்கள் கிடைக்க வில்லை. ஆயினும் ஒட்டுவதற்காக உபயோகப்படும் கோந்து முதலிய பொருட்களை உண்டாக்குவதற்காக உபயோகமாகும் அரிசி, கோதுமை, மரச்சீனி மாவுக்களை சுமார் 1,500 டன்களாகவும் அந்த மாவுக்கள் தயார் செய்வதற்காக உபயோகமாகும் தான்யங்களைச் சுமார் 2,000 டன்களாகவும் கணக்கிடலாம்.

(3) **சாய வஸ்துக்களுக்காக :** சாயம் செய்யும் பொழுது டெக்ஸ்ட்ரைன் உபயோகிக்கப்படுவதுயாவரும் அறிந்ததே. இந்த விதமாக உபயோகமாகும் டெக்ஸ்ட்ரைன் சுமார் 5,000 டன்கள் ஆகும். பம்பாய் மாகாணம் மட்டும் 2,500 டன் உபயோகிக்கின்றது. சரியான புள்ளி விபரங்கள் தெரியவில்லை. சர்க்கார் தான் அவைகளைச் சேகரிக்க முடியும். அதனால் நான் கணக்கிட்டிருப்பது குறைவாக இருக்குமே யின்றி கூடுதலாக இருக்காது.

இந்த மாதிரி டெக்ஸ்ட்ரைனைச் சாயத்துக்காக "இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்டீரிஸ்", "ஷா வாலஸ்", போன்ற ஐரோப்பியக் கம்பெனிகளும் அநேக இந்தியக் கம்பெனிகளும் உபயோகித்து வருகிறார்கள். இதற்கு உயர்தரமான டெக்ஸ்ட்ரைனே தேவை. அப்படிப்பட்ட டெக்ஸ்ட்ரைனைத் தான்யத்திலிருந்து 30 சதமான விகிதமே தயார் செய்ய முடியும். அதனால் 5,000 டன் டெக்ஸ்ட்ரைன் செய்ய 13,000 டன் தான்யங்கள் உபயோகிக்கப் படுகின்றன.

இந்த விதமாக மேற்கூறிய மூன்று உபயோகங்களுக்காகவும் வருஷந்தோறும் செலவாகும் தான்யங்கள் மொத்தம் 1,61,400 டன் ஆகும்.

இந்தப் புள்ளி விபரங்களை நான் ஸ்டார்ச்சையும் டெக்ஸ்ட்ரைனையும் உபயோகிப்பவர்களிடமிருந்தே சேகரித்திருக்கிறேன். என் கணக்கெல்லாம் உபயோகிப்பவர் அளவைப் பொறுத்ததே யாகும். ஆதலால் அவைகளை உற்பத்தி செய்யும் ஆலைகளில் சேதமாவது சுமார் 25% சதமானத்துக்குக் குறையாது. ஆதலால் மொத்தமாக உபயோகமாகும் தான்யங்கள் எல்லாம் சேர்ந்து வருஷந்தோறும் 2 லட்சம் டன்கள் ஆகும்.

ஏராளமான உணவுப் பொருட்களை இந்த மாதிரி உபயோகிப்பதை உடனேயே நிறுத்திவிட வேண்டும். அது முடியாவிட்டால் அதிகமான அளவு குறைத்தேனும் மக்கள் உண்பதற்குக் கிடைக்கும் படியாகச் செய்ய வேண்டும்.

இந்த மாதிரிச் செய்வதால் துணித் தொழிலுக்கோ சாயத் தொழிலுக்கோ குந்தகம் சிறிது கூட ஏற்பட்டு விடாது. ஏனெனில் காப்பி-டெக்ஸ்ட்ரைனையும், புளியங்கொட்டை ஸ்டார்ச்சையும், காட்டிலிருந்து கிடைக்கக் கூடிய வேறு பல பொருள்களையும் உபயோகிக்கலாம். இப்போது நூற்றுக்கணக்கான டன் புளியங் கொட்டையானது அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

இதுமட்டுமன்று. துணி ஆலைகளிலும், சாயச் சாலைகளிலும் லஞ்சத்தின் காரணமாகவும் பசை பொருட்கள் ஏராளமாக வீணாய் வருகின்றன. ஸ்டார்ச், டெக்ஸ்ட்ரைன் பொருட்கள் உற்பத்தி செய்வோர் மேற்கூறிய ஆலைகளிலும், சாலைகளிலும் உள்ள மானேஜர்க்கோ, சாய நிபுணர்க்கோ, பசையிடுவோர்க்கோ அந்தப்பொருட்களை அதிகமாக வாங்கும்படியாக லஞ்சம் கொடுக்கிறார்கள். அவர்கள் அதற்காக அவைகளைத் தேவைக்கு அதிகமாக வாங்கி வீணாக்குகிறார்கள்.

சிலர் 6 அணா முதல் 8 அணா வரை விலை வைத்து விற்க வேண்டிய துணிக்குத் திண்ணமாகப் பசையூட்டி 10 அணா முதல் 14 அணா வரை விலை வைத்து விஷயம் அறிய முடியாத பரம ஏழை மக்களுக்கு விற்கிறார்கள். இன்ன நம்பர் நூல் கொண்டு நெய்யும் இன்னவிதமான துணிக்கு இதுதான் குறைந்த பட்சம் பசையளவு இதுதான் கூடிய பட்சம் பசையளவு என்று நிர்ணயித்து விட்டால்தான் இந்த அநியாயத்தைத் தடுக்கவோ குறைக்கவோ செய்யலாம். இதைத் தேசீய சர்க்கார் செய்ய வேண்டியிருக்கும் என்று எண்ணுகிறேன்.

அதே மாதிரி மேற்கூறிய இரண்டாவது மூன்றாவது தவறுகளையும் ஸ்டார்ச்சுக்குப் பதிலாக வேறு வஸ்துக்களைக் கொடுத்தோ அல்லது ஸ்டார்ச் முதலிய பொருள்களை உபயோகிப்பதைத் தடுத்தோ நிவர்த்திக்க வேண்டும். இந்த விஷயங்களிலும் ஒரு பக்கம் லஞ்சமும் மற்றொரு பக்கம் வாங்குகிறவர்களை ஏமாற்றுவதும் நடக்கின்றன. 3 ரூபாய் முதல் 6 ரூ. வரை விற்க வேண்டிய சாயத்தை டெக்ஸ்ட்ரைனைச் சேர்த்து அதே விலைக்குக் கூட விற்காமல் அதிகமான விலைக்கு விற்று 100 சதமானம் லாபம் அடைகிறார்கள்."

## (2) வேண்டாத விருந்து

உணவுப் பயிர்களை உண்டாக்காமல் புகையிலைச் சாகுபடியைப் பரவச் செய்யும் அநியாயத்தைப்பற்றி குஜராத்திலிருந்து எழுதியுள்ள நண்பர் தரும் விபரங்கள் திடுக்கிடச் செய்யக் கூடியவைகளாக இருக்கின்றன.

அவருடைய கடிதத்தின் சாரமாவது :—"நீங்கள் பூந்தோட்டங்களை அழித்து காய்கறிகளையும் தான்யங்களையும் பயிர் செய்யவும், விவசாயத்துக்காக அதிகமான கிணறுகளை வெட்டவும், பழய கிணறுகளைப் பழுது பார்க்கவும் கூறுகிறீர்கள். ஆனால் அதே சமயத்தில் உணவுச் சத்து இல்லாததோடு உடம்புக்குக் கேடு செய்வதாகவுள்ள புகையிலையை லட்சக்கணக்கான ஏக்கரா பூமியில் பயிர் செய்கிறார்களே. இந்த விதமாக உணவு உண்டாக்கு

வதற்கு உபயோகப்படுத்த வேண்டிய குழாய்க் கிணறுகளும் எஞ்சின்களும் அவற்றிற்கு உபயோகமாகும் பெட்ரோல் எண்ணெய்யும் கள்ள மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பதற்காகப் புகையிலையை உண்டாக்குவதற்கு உபயோகப்படுகின்றனவே.

1942ல் பிரிட்டிஷ் சர்க்கார் புகையிலை மீது ராத்தலுக்கு 9 அணா அல்லது மணுவுக்கு 23 ரூபாய் வரி விதித்து, அதிகப் பட்ச வருமானம் கிடைக்கும் பொருட்டு புகையிலைச் சாகுபடியை ஆதரித்து வந்தார்கள். இதன் காரணமாகத்தான் புகையிலைச் சாகுபடி செய்யும் நிலங்கள் ஏராளமாக அதிகரித்து விட்டன.

புகையிலை மீது வரி விதியாத சமஸ்தானங்களில் சமஸ்தான சர்க்கார் விவசாயிகளுக்கு இனமாக நிலமும் புகையிலை விதையும் தந்து தங்கள் சமஸ்தானத்தில் புகையிலையைச் சாகுபடி செய்வதற்காக அதிகச் சம்பளம் கொடுத்து புகையிலை விவசாயிகளை வெளியேயிருந்து வர வழைத்தார்கள். இந்தவிதமாகச் சுமார் 2000 புகையிலை விவசாயிகளின் குடும்பங்கள் குஜராத்திலிருந்து பக்கத்திலுள்ள பவநகர், ஜுனகாட், மோர்வி, ஜாம்நகர் போன்ற சமஸ்தானங்களுக்குப் போய்ப் புகையிலைச் சாகுபடியில் ஈடுபடலானார்கள். அத்துடன் உதயப்பூர், ஜோட்பூர், கேட்ரி, ரட்லம், குவாலியர், போப்பால், இந்தூர், உஜ்ஜயினி முதலிய அநேக சமஸ்தானங்கட்கும் அது பரவி விட்டது. 90 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் புதிதாகப் புகையிலை விவசாயத்துக்குப் பண்படுத்தப்பட்டுள. நைஜாம் ராஜ்யத்திலும் பாலன்பூர் சமஸ்தானத்திலும் புகையிலை வரி போடப்பட்டிருக்கிறது. புகையிலை விவசாயம் வருமானத்தை உத்தேசித்து ஆதரிக்கப்பட்டும் வருகிறது. பரோடா சமஸ்தானத்தில் புகையிலை உற்பத்தி ஆயிரம் பொதியிலிருந்து 7 லட்சம் பொதியாக ஏறி யிருக்கின்றது''

இறுதியில் அந்த நிருபர் பஞ்சம் பயமுறுத்திக் கொண்டு வரும் இந்தக் காலத்தில் புகையிலைச் சாகுபடி செய்வதை நிறுத்திவிட்டு, அதைப் பயிரிட்டுவந்த நிலங்களில் எண்ணெய் விதைகளையும் பருத்தியையும் பயிரிட்டு புண்ணாக்கையும் பருத்திக் கொட்டையையும் கறவைமாடுகளுக்குத் தான்யத்துக்குப் பதிலாகத் தீனியாகப் போடவேண்டும் என்று யோசனை கூறுகிறார்.

## (3) குண்டூர் கடிதம்

குண்டூரிலிருந்து திரு. சீதாராம சாஸ்திரி எழுதுவது :—

'' நான் குண்டூர் ஜில்லாவில் நடைபெறும் புகையிலைச் சாகுபடி விஷயமாகக் குண்டூரிலுள்ள விவசாய இலாகா டிபுடி டைரெக்டரிடம் செப்டம்பர் மாதம் பேசிக் கொண்டிருந்தேன். சர்க்கார் புகையிலையைப் பயிர் செய்வதை நிறுத்திவிட்டு அந்த நிலங்களை உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக உபயோகிப்பது சம்பந்தமாக யோசனைகள் கூறுமாறு கேட்டிருந்தார்கள். விர்ஜினியா புகையிலை, சாதாரண நாடன் புகையிலை ஒவ்வொன்றும் சுமார் 70ஆயிரம் ஏக்கரா பூமியில் சாகுபடி செய்யப்படுகின்றது. ஆகவே புகையிலைச் சாகுபடியாகும் மொத்தம் நிலத்தின் அளவு 1,40,000 ஏக்கராவாகும். எந்தவிதமான புகையிலை யானாலும், ஏக்கராவுக்கு 150 ரூ. கிடைக்கும் என்றும் உணவுப் பயிரானால் 80 ரூபாயே கிடைக்கும் என்றும் கணக்கிடப்பட் டிருக்கிறது. அதனால் ''பணப் பயிர்'' செய்பவர்க்கு ஏக்கராவுக்கு 70 ரூ. வீதம் அதிக வருமானம் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. ஆதலால் புகையிலையை விட்டு விட்டு உணவுப் பொருட்களைப் பயிரிட வேண்டுமானால் அவர்கட்கு ஏக்கராவுக்கு 70 ரூ. வீதம் சகாய நிதி கொடுக்க வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது.

அநேகர் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டு முன் கூட்டி விவசாயிகட்குப் பணம் கொடுத்திருப்பதால், புகையிலைச் சாகுபடியை இந்த வருஷத்தில் பாதியாகக் குறைத்து அடுத்த வருஷத்தில் முழுவதையுமே நிறுத்தி விடுவது என்றும் யோசனை கூறப்பட்டது.

விவசாய டைரெக்டர் பாப்ட்லாவில் செய்த பிரசங்கத்தில் புகையிலைச் சாகுபடியைத் தடுப்பதற்காகச் சர்க்கார் சட்டங்கள் செய்ய யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

மேற்கூறிய 1,40,000 ஏக்கரா பூமி தவிர, 1000 ஏக்கரா விர்ஜினியா நாற்றங்காலாக இருந்து வருகின்றன. அந்த பூமியையும் தான்யங்கள் பயிரிட உபயோகிக்க முடியும்.

புகையிலையின் தீமைகளைப் பற்றி விவரிக்கவேண்டிய அவசியமில்லை. அது மனிதனுக்கோ மிருகத்துக்கோ, பட்சிக்கோ எதற்கும் எவ்வித உணவும் பானமும் ஆவதில்லை.

இந்தப் புகையிலைப் பிரச்னை அகில இந்திய விஷயமாதலால் சகல மாகாணங்களும் சமஸ்தானங்களும் ஒன்று சேர்ந்து கவனிக்க வேண்டியதாகும். காங்கிரஸ் காரியக் கமிட்டியானது இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து எல்லா மாகாணங்களுக்கும் வழி காட்டவேண்டும்.''

கொடிய பஞ்சம் ஏற்படப் போகும் இந்த நெருக்கடியான சமயத்தில் பூமியின் சாரத்தை உறிஞ்சுவதில் தலைசிறந்த பணப்பயிராக வுள்ள இந்தப் புகையிலைச் சாகுபடியைத் தடுப்பதன் அவசியத்தைப் பற்றி யாரும் ஆட்சேபம் கூறமுடியாது. ஆனால் புகையிலை விவசாயிகளுக்கு சகாயநிதி கொடுக்கவேண்டும் என்று யோசனை கூறுவது அடாத காரியம். அத்தகைய யோசனை பணத்தைப் பரதெய்வமாக வணங்கும் முதலாளித்வ முறையில் தான் எழ முடியும். வியாபாரிகள் பணம் கொடுத்திருந்தால் அதற்காக அவர்கள் பஞ்சத்தையும் பட்டினியையும் தங்கள் நலனுக்காக உபயோகித்துக் கொள்ள முடியாது. மற்றப் பொருள் உற்பத்தியைப் போலவே பயிர் உற்பத்தியும் உபயோகத்துக்காகவே நடைபெறவேண்டும். ''பணப் பயிர்''கள் வந்து நம்முடைய பொருளாதாரத்தைப் படையெடுத்து நாட்டை நாசமாக்கி வருகின்றது. நல்ல முறையில் நடைபெறும் நாட்டில், நிலமெல்லாம் உழுது பயிரிடுவோர்க்கே சொந்தமாயிருக்கும். அவர்களும் ஜனங்களுக்கு தேவையானவைகளைப் பயிரிடுவார்களே யன்றிப் பணலாபத்தை உத்தேசித்துப் பயிரிடமாட்டார்கள். பணக்காரருடைய ஆதிக்கம்தான் விவசாயத்தை இன்று அடிமைப்படுத்தி வைத்திருக்கின்றது. அதை அந்தப் பிடியிலிருந்து விடுவித்து விடவேண்டும்.

## (4) இரண்டு பயனுள்ள யோசனைகள்

அதிகமாக உணவை உற்பத்தி செய்வதற்காக இரண்டு பயனுள்ள யோசனைகள் கூறப்படுகின்றன. அவைகள் உடனே சர்க்காரால் கவனிக்கத் தக்கனவாகும்.

குவெட்டாவிலிருந்து ஒரு எஞ்சினியர் எழுதுகிறார் :—

சர்க்கார் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் தான்யங்களுடன் உபயோகிப்பதற்காக அதிகமாகக் காய் கறிகளை உண்டாக்க உண்மையிலேயே விருப்பமுடையவர்களா யிருந்தால், மராமத்து இலாகாவினது கால்வாய்களின் இரண்டு கரைகளிலும் நீர்ப்பக்கமாகவுள்ள சரிவுகளில் காய்கறிகளைப் பயிர் செய்வதற்கு உபயோகிக்கவேண்டும் என்று வைஸிராய் மாகாண சர்க்கார்க்குக் கூறவேண்டும் என்று நான் யோசனை கூறுவேன். கால்வாயின் ஒவ்வொரு கரையிலுமுள்ள நீர்ப்பக்கமான சரிவு 20 அடி

அகலமு முள்ளதாகவும் தண்ணீர் மட்டத்துக்கு ஆறு அங்குல உயரமுள்ளதாகவும் இருக்கின்றது.

அந்தச் சரிவுகளை உபயோகித்தால் ஆயிரக் கணக்கான நல்ல நிலவளமுள்ள பூமி கிடைக்கும். அவற்றிற்குப் புதிதாகக் கால்வாய்கள் வெட்டவேண்டியது மில்லை. ஜலம் பாய்ச்ச வேண்டியது மில்லை. அந்த பூமி எப்பொழுதும் போதுமான ஈரமுடையதாகவும் பயிர் செய்வதற்கு ஏற்றதாகவு மிருக்கும். ஸிந்து மாகாணத்தில் எங்கெல்லாம் ஜலம் அளந்து விடுவதற்காக மராமத்து இலாக்காக்காரர் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் தங்கட்கு வேண்டிய காய்கறிகளை அந்தச் சரிவுகளில் பயிர் செய்து வருகிறார்கள்.

பக்கத்து வயற்காரர்களுக்கு இந்தச் சரிவுகளில் பயிர் செய்ய அனுமதி கொடுத்தால் அவர்கள் சந்தோஷமாக அவைகளில் காய்கறிகளைப் பயிர் செய்வார்கள். அவர்கள் அந்தச் சரிவுகளில் எதையும் தங்கள் நிலத்தோடு சேர்த்துக்கொண்டு விடாமல் மராமத்து இலாகா பார்த்துக்கொண்டால் போதும். ஆனால் அதையுங்கூட இந்த நெருக்கடியான சமயத்தில் தேசத்துக்கு உண்டாகும் பெருத்த நன்மையை உத்தேசித்துப் பிரமாதப்படுத்த வேண்டியதில்லை.

மாகாண சர்க்கார்கள் காய்கறிகளை ரயில்களில் ஏற்றவும் சந்தைகட்கு அனுப்பவும் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்க வேண்டும். இதை, யுத்த காலத்தில் காய்கறிகளை இராணுவ முகாம்களுக்கு அனுப்புவதற்காகச் செய்த மாதிரியிலேயே செய்யலாம். அநேக கண்டிராக்டர்களிடம் கொடுத்த இரவல் குத்தகை லாரிகளை நியாயமான விகிதப்படி பணம் வாங்கிக்கொண்டு தரலாம். ஏற்கனவே கால்வாய்களின் பக்கமாக ரோடுகள் இருந்து வருவதால் இந்த லாரிகளின் உபயோகத்துக்காகப் புதிய ரோடுகள் போடவேண்டிய அவசியமில்லை. இருக்கும் ரோடுகளைச் செப்பனிட்டால் மட்டும்போதும். அதையுங்கூட விவசாயிகளிடமே விட்டுவிடலாம். அவர்கள் தத்தம் எல்லைக்குட்பட்ட ரோடுகளைச் சந்தோஷமாகக் கவனித்துக் கொள்வார்கள்.

காய்கறிகளைப் போல வேறெந்தப் பயிரையும் அவ்வளவு சீக்கிரத்தில் பயிர் செய்துவிட முடியாது. சர்க்கார் முயன்றால் காய்கறிகளை சூரிய உஷ்ணத்தில் உலர்த்தி வைத்துக்கொள்வதும் எளிதாகவே முடிந்துவிடும்.

மற்றொரு யோசனை பிரிட்டிஷ் இராணுவ வீரர் ஒருவருடையது. அவர் காந்தியடிகளுக்கு எழுதியதாவது:—

"இந்திய மக்களுக்கு இன்னுமொரு பஞ்சம் வரப்போவது குறித்து எனக்கு மிக்க கவலையாக இருக்கிறது. இந்த விஷயத்தைப் பத்திரிகைகளில் கவனமாகப் படித்துவருவதோடு தாங்கள் வைஸிராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கு எழுதிய 21 உக் கடிதத்தையும் வாசித்தேன்.

இந்திய இராணுவத்தைத் தாங்கள் கூறுவதுபோல உபயோகிக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் பிரிட்டிஷ் இராணுவமும் இந்திய ராணுவமும் தங்கள் ஜாகைகளிலுள்ள காலி யிடங்களில் எல்லாம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும் என்றும் எண்ணுகின்றேன். நிலமிருக்கிறது, ஆட்களும் இருக்கிறார்கள், அந்த யிடங்களில் ஜல வசதிக்கும் குறைவில்லை. பிரிட்டனில் சேனையானது யுத்த காலத்தில் இந்த விதமாகத்தான் செய்து வந்தது. இந்தியாவிலும் தற்கால நிலைமையில் அதேமாதிரியான காரியங்கள் செய்வதே நியாயமானதாகும்.

உணவுப் பொருட்களைக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக வினியோகிக்க வேண்டும் என்று தாங்கள் கூறிய யோசனையும் மிகப் பொருத்தமானதாகும். நான் போர்க்கு வருமுன் பிரிட்டனில் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருந்தேன். அத்துடன் இங்குவந்தபின் அந்தஇயக்கம் இங்கு நடைபெறும்முறைகளையும் கவனித்து வந்தேன். இரண்டு தேசங்களிலுமுள்ள கூட்டுறவு இயக்கங்களுக்கு மிடையில் பெருத்த சில வேற்றுமைகள் உள. பிரிட்டனில் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஜனங்கள் வசமே உள. ஆனால் இங்கே சர்க்கார் கண்காணிப்பிலேயே இருந்து வருகின்றன. இது ஒரு முக்கியமான வித்தியாசம். இது கவனிக்க வேண்டிய வத்தியாசம் என்பதை தாங்கள் ஒப்புக் கொள்வீர்கள். ஆயினும் யுத்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சில்லறை விற்பனை ஸ்டோர்கள் ஜனங்களுக்கு கோதுமை மாவு, சர்க்கரை, புண்ணாக்கு முதலியன நியாயமான விலைக்குக் கிடைக்கும்படி செய்யும் விஷயத்தில் நல்ல சேவை செய்து வந்திருக்கின்றன. அதைத் தாங்கள் பாராட்டியிருப்பது எனக்குச் சந்தோஷத்தைத் தருகின்றது.

டில்லி, பியாரிலால்.
11—5—46

## ஸிம்லாவிலுள்ள வால்மீகிகள்

"வால்மீகி" என்பது தோட்டிக்கு உபயோகிக்கும் மற்றொரு பெயர். ஸிம்லாவில் அவர்கள் வசிக்கும் சேரி மிகக் கேவலமாக இருக்கின்றது. அவர்களைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. அவர்களுக்காக ராஜகுமாரி அமிர்தகௌர் பல வருஷங்களாக தம்மாலியன்றமட்டும் சேவை செய்து வருகிறார். ஆனால் அவர் ஒருவரால்மட்டும் எவ்வளவு சாதித்துவிட முடியும்? நான் அவ்வளவு தூரம்போய் அவர்களுடைய நிலைமையை நேரில் பார்க்க முடியவில்லை. என்னுடன் தங்கியிருக்கும் பாதுஷா கானை அங்கே போய்ப் பார்த்து வரும்படி அனுப்பினேன். அவர்களுடைய குடில்களைப்பற்றிச் சொன்னது மிகுந்த வருத்தம் தருவதாயிருக்கின்றது. வால்மீகிகளில் சிலர் என்னிடம் வந்து தங்கள் குறைகளைக் கூறினார்கள். அவர்கள் குடியிருக்கும் குடிசைகளை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டிக்கொடுத்தாலே போதும், அவர்களுடைய மற்றக் குறைகள் எல்லாம் தாமாகவே அகன்றுபோகும் என்று எண்ணுகிறேன். இந்த அசுத்தக் களஞ்சியத்தை எவ்வளவு சீக்கிரமாக ஒழித்துவிட முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஒழித்து விடுவதே பொதுஜனங்களுடைய கடமையும் ஸிம்லா முனிசிபல் சபையாருடைய கடமையுமாகும். அசுத்தமானவர்கள் இருக்கும் ஊரில் யாரும் சுத்தமாக இருக்கமுடியாது.

ஸிம்லா, மோ. க. காந்தி.
13—5—46.
(ஹரிஜன பந்துவிலிருந்து)

---

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

வருஷ சந்தா தபால் செலவு உள்பட ரூ. 7 0 0
ஆறுமாத சந்தா ,, ,, ரூ. 3 8 0

தமிழ் ஹரிஜன்,

தியாகராயநகர் :: சென்னை.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணாமலை.